www.tamilarangam.net

ஈழநாடு 21-8-87

# யாழ். பல்கலைக்கழக மாணவர் விவகாரம்: இன்று முக்கிய கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவன் பி. நயாகரன் அரசியல் காரணங்களுக்காக தம்மால் கைதுசெய்யப்பட்டதாகவும், அவரது விசாரணை முடிந்துவிட்டால் பல்கலைக்கழகத்தில் அவர் மீண்டும் கல்வி தொடர எவ்விதமான அச்சுறுத்தலும் இருக்கமாட்டாது எனவும் விடுதலைப் புலிகள் இயக்கம் தங்களுக்குவாக்குறுதியளித்துள்ளதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் குழு சார்பில் உ. ஔவை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் பி. நயாகரனை உடனடியாக பல்கலைக்கழகத்திற்கு வருமாறு வேண்டுகிறோம்.

## இன்று கூட்டம்

"இன்று வெள்ளிக்கிழமை காலை பத்துமணியளவில் விஞ்ஞானபீட மாணவன் பி. நயாகரன் பிரச்சினை தொடர்பாக கைலாசபதி அரங்கில் பொதுக்கூட்டம் நடைபெறும். இக்கூட்டத்தில் மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம். இக்கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட மாணவர் தமது கல்வியைத் தொடர விடுதலைப் புலிகள் இயக்க பிரதித் தலைவர் மாத்தையா நேரில் வந்து மாணவர்களுக்கு உறுதியளிப்பார்.

[ஓ]

ஈ. நாடு
21/8/87

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்